1982 மார்ச் 20]

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் இருதய நோய் சிகிச்சைப் பிரிவு கட்டும் திட்டம் :

*வினா எண் 575—திரு. எ. டி. குலசேகரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருதய நோய் சிகிச்சைக்கு போதியக் கருவிகளுடன் விரிவான துறை கட்டப்படுமா ?

(ஆ) போதிய ஈ.சி.ஜி. கருவிகள் சரிவர இல்லாதிருப்பது உண்மையா ?

(இ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) தற்போது இல்லை.

(ஆ) ஆம்.

(இ) கூடுதல் ஐந்து ஈ.சி.ஜி. கருவிகள் வாங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலே கார்டியாகிராம் செக்ஷனில் போதிய அளவுக்கு மெஷின்கள் இல்லாத குறை இருக்கிறது. அது அமைச்சருக்கும் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். ஒரு எக்கோ கார்டியாகிராம் மெஷின் தேவை என்று 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதி அரசுத் துறைக்கு கடிதம் சாங்க்ஷன் பண்ணச்சொல்லி எழுதியும்கூட நான் விசாரித்த வரையில் இது வரையில் அது நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. 1981–82 ஆம் ஆண்டுக்கு இந்த ஆஸ்பத்திரிக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மிச்சம் இருக்கின்ற நிதியை சரண்டர் பண்ணப்போவதாக நான் கேள்விப்படுகிறேன். அதற்கு சாங்ஷன் கிடைக்காததால் அந்த மெஷினை வாங்கமுடியவில்லை. ஆகவே எக்கோ கார்டியாகிராம் மெஷினை உடனடியாக வாங்குவதற்கும் சரண்டர் பண்ணுவதற்கு முன்னால் அமைச்சர் அவர்கள் தலையிட்டு நிறைவேற்றித் தரு வதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கொஞ்சம் விஷயம் தெரிந்து கொண்டு கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஆனால் முழு விவரமும் தரப்பட வில்லை என்று நினைக்கிறேன். அங்கே

எக்கோ கார்டியாகிராம் வேண்டுமென்று இலாகாவுக்கு எழுதினார்கள். 8 லட்சத்து 42 ஆயிரத்து 37 ரூபாய் பார்ட் 2 ஸ்கீமில் சேர்க்கப்பட்டது உண்மை. ஒரே நேரத்திலே பல விஷயங்கள் வேண்டும் என்று சொல்லப்படுகிறபோது அத்தனையையும் கொடுப்பதற்கு நிதிநிலைமை இடம் கொடுக்காது. மாண்புமிகு உறுப்பினர் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே இருந்து பணியாற்றி இருகிறார்கள். அவர்களுக்குத் தெரியும். அது அல்ல பிரச்சினை.பணம் இல்லாத காரணத்தினாலே கொஞ்சம் டெபர் பண்ணப்பட்டது. We are again pressing that and it is likely it may be granted ஆனால் ஏதோ ஒதுக்கப்பட்ட பணம் நம்முடைய திறமையின்மை காரணமாக சரண்டர் செய்யப்பட்டது என்ற பிரச்சினை இல்லை. நம் இலாகாவைப் பொறுத்தவரையில் சுறுசுறுப்பாக செயல்பட்டு வருகிறோம். சரண்டர் ஆகிற பிரச்சினையே இல்லை தவறான எண்ணம் வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

There is no question of surrendering any amount.
The question is about pressing this and getting it.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுரை மாவட்டத்தில் எப்படி இராமநாதபுரம் மாவட்டமும், தென் மாவட்டங்களும் இணைக்கப்படுகிறதோ, அதேமாதிரி நீலகிரி மாவட்டம், பெரியார் மாவட்டம், மதுரை மாவட்டத்தில் ஒரு பகுதி இந்த கோவை மருத்துவமனையை நம்பியிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்த அடிப்படையிலே போதிய ஈ.சி.ஜி. வசதி இல்லாததோடு மருத்துவமனைக்கு தேவையான நவீன கருவிகளும், அவசர பிரிவிற்கு தேவையான அவசர கருவிகளும் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? எந்த கண்ணோட்டத்தோடு பார்த்தாலும், பார்க்காவிட்டாலும் தான் பிறந்த மருத்துவமனை என்ற அடிப்படையிலே அமைச்சர் அவர்கள் கொஞ்சம் தயவுசெய்து கருணைகாட்டி எல்லா பிரிவுகளையும் வாங்கித் தருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோவைத் தம்பி அவர்கள் கேட்பது ஈ.சி.ஜி., மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் கேட்டது ''ஈக்கோ கார்டியாகிராம்'' அதற்கு தான் நெகட்டிவ் ஆன்சர் என்று சொன்னேன். ஈ.சி.ஜி. பொறுத்த வரையில் அது போதாது என்ற அடிப்படையிலே ஈ.சி.ஜி. மானிட்டரின் என்று இருக்கிறதே, அது கான்ஸ்ட்டன்டாக துடிதுடிப்பை கொடுத்துக் கொண்டிருக்கும். உடனடியாக தவறு ஏதும் ஏற்படுமானால் அதை கண்டுபிடிப்பதற்கு சௌகர்யமாக இருக்கும். கோவைத் தம்பி அவர்களுக்கு நிச்சயமாக மனநிறைவைத் தரும் என்று நினைக்கிறேன். இந்த கருவிகள் 5 கருவிகள் வாங்கி அந்த இடத்திலே மானிட்டரின் ஆரம்பிக்க விரும்புகிறோம்.

1982 மார்ச் 20]

1978 ஆம் ஆண்டு முதல் முதலாக மானிட்டரிங் வாங்கினோம். இப்போது ஐந்து கருவிகள் வாங்கி ஒரு நல்லவகையிலே. அது பயன்படுகிற அளவிற்கு நிச்சயமாக பொறுத்தப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை பொது மருத்துவமனையிலுள்ள குடல் மற்றும் கல்லீரல் நோய் சிறப்பு மருத்துவப்பிரிவு.

* வினா எண். 576 திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடல் மற்றும் கல்லீரல் நோய் சிறப்பு மருத்துவப் பிரிவு (Medical Gastro Entrology) சென்னை பொது மருத்துவமனையில் மட்டும்தான் தமிழகத்தில் இருக்கிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் மதுரை மருத்துவமனையில் இப்பிரிவு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) இதற்கான செயற்குறிப்பொன்று மருத்துவக் கல்வி இயக்குநரிடமிருந்து வரப்பெற்று அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை இராஜாஜி மருத்துவமனையிலே அனுமதிக்கப்படுகிற உள்நோயாளிகளிலே ஏறத்தாழ 30 சதவீதத்தினர் இந்த குடல் நோயாலும், கல்லீரல் நோயாலும் அவதிபடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு வைத்தியம் பார்க்கவேண்டுமென்றால் தனிப்பட்டவர்களிடம் செல்லும்போது 1,000 ரூபாய், 1,500 ரூபாய் என்று கேட்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்பு ஒருமுறை சொல்கிறபோது தேவை ஏற்படுகிற போது அது செய்யப்படும் என்று சொன்னார்கள். இங்கே சென்னையிலே இருக்கிற அந்த பிரிவைச் சேர்ந்து இயக்குநரும் மதுரையிலே அந்த பிரிவு ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மதுரையிலே இருக்கிற டீன் அவர்களும் அது ஏற்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலையை கருதி தென் மாவட்டங்கள் அனைத்தும் பயன்பெறுகிற அளவிற்கு அந்த பிரிவை விரைவாக ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.